111

SR

சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சிப்பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த லேட் D.மன்னர்தங்கோ, உதவி பயிற்சி அலுவலர் அவர்களின் மனைவி திருமதி.B.ஹேமலதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு(ப்பி2)த் துறை

அரசாணை (4ப) எண்.3

நாள் 11.03.2022
பிலவ வருடம் – மாசி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள்: 23.01.2020.
2. இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை கடித ந.க.எண்.16579/பஅ3/2019, நாள்: 09.09.2021.

--------

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கடிதத்தில், அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் உதவி பயிற்சி அலுவலராகப் பணியாற்றிய போது 16.10.2018 அன்று பணியிடை மரணமடைந்த லேட் D.மன்னர்தங்கோ என்பவரது மனைவி திருமதி.B.ஹேமலதா என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை (பயிற்சிப்பிரிவு) அவர்களின் 13.03.2020 நாளிட்ட செயல்முறை ஆணை எண்.16579/பஅ3/2019-ன்படி வேலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு 24.03.2020 முற்பகல் அன்று பணியில் சேர்ந்தார் என்றும், தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் கோரியுள்ளார்.

2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, பணியிடை மரணமடைந்த லேட் D.மன்னர்தங்கோ என்பவரது மனைவி திருமதி.B.ஹேமலதா என்பவருக்கு கருணை அடிப்படையில்

த.பி.பா.,

தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை பயிற்சி பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் 24.03.2020 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டுவதால் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றைப் பெற விதிகளின்படி தனியர் தகுதியுடையவராகிறார். இதுகுறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

3. இவ்வாணை மனிதவள மேலாண்மைத் (ஜி3) துறையின் அ.சா.எண்.3517/ஜி3/2022, நாள் 16.02.2022-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கிர்லோஷ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032. (இ) (அசல் மூலச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).

திருமதி.B.ஹேமலதா, இளநிலை உதவியாளர் (வழி:- இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை-600 032).

சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

**நகல்**

அரசுச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-600 009.

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை - 600 009.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ/அநமு-II) துறை, சென்னை - 600 009.

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

14/3/22

(ஜெ.மீரா)
அரசு சார்புச் செயலாளர்

14/3/2022